# நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

12. மேலும் சிலசமயங்களில் அது ஒ, ஒருவிதத்தில் கடினமாக இருக்கிறது, ஆனால் அது உங்களுக்கு நன்மை செய்யும். ஆமாம். அது என்னை இரட்சித்தது, அது இப்பொழுது இந்த எல்லா 23 வருடங்களும் என்னை சந்தோஷமாக வைத்திருக்கிறது, நான் இயேசு கிறிஸ்துவுக்குள் மிகவும் சந்தோஷமாயிருந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணி வருகிறேன். மேலும் நான்... என்னுடைய ஜீவியத்தில் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான் உள்ளது: அது என்னவென்றால், நான் ஒரு சின்னஞ்சிறிய குழந்தையாக இருந்த போதே, என்னுடைய பாவங்களை மன்னிக்கும் இயேசு கிறிஸ்துவை அறியாமல் போய் விட்டேனே என்பதுதான்.

13. பெற்றோர்களே, நான் இதை உங்களுக்குக் கூறுகிறேன், நான்... நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக சரியான விதமான வீட்டை வைத்திருங்கள். செய்ய வேண்டிய காரியம் அதுதான். ஏனென்றால், நான் வளர்ந்த போது, எனக்கு ஒரு கிறிஸ்தவ வீடு

இருந்திருக்குமென்றால், அநேகமாக நான் இன்றிரவு கர்த்தராகிய இயேசுவோடு கூட அதிக பக்கத்தில் இருந்து, இன்னும் அதிக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்; ஆனால் என்னுடைய ஜனங்களோ ஒரு பக்தியுள்ள குடும்பமாக இருக்கவில்லை. தேவனோ ஆச்சரியமான கிருபையினால் என்னை இரட்சித்தார். அப்போது, அது முதற்கொண்டு நான் அவர்களில் அநேகரை கர்த்தரிடம் வழிநடத்தியிருக்கிறேன். நான் எனது தாயாருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய தகப்பனார் தம்முடைய இருதயத்தை கிறிஸ்துவுக்குக் கொடுத்து, என்னுடைய கரங்களில் இருந்தவாறே மரித்துப் போனார். என்னுடைய தாத்தா, நான் அவருக்கு ஏறக்குறைய 90 வயதில் அந்த ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்தேன்; என்னுடைய சகோதரர்கள் சிலருக்கும் மற்றவர்களுக்கும் நான் (ஞானஸ்நானம் கொடுத்தேன்). மேலும் எல்லாரும்... என்னுடைய சிறு... இங்கேயிருக்கும் என்னுடைய சிறிய மகன், அதன்பிறகு என்னுடைய சிறிய மகளுக்கு ஏழு வயதாக இருந்தது. என்னுடைய வேறொரு மகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க அவள் இன்னும் மிகவும் குழந்தையாக இருக்கிறாள்; அவளுக்கு இரண்டு வயது மட்டுமே ஆகிறது.

எனவே அவள் உயிர்வாழ்வாள் என்றால், ஏன், ஞானஸ்நானம் பண்ணப்பட அவளுக்குப் போதிய வயது ஆகும்போது, நான் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பேன் என்று நம்புகிறேன். எனவே அவள் ஏற்கனவே கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டு விட்டாள், அல்லது நாங்கள் அதை "பிரதிஷ்டை செய்தல்" என்று அழைக்கிறோம். எனவே நாங்கள் அப்படியே அந்தக் குழந்தையை கர்த்தரிடம் பிரதிஷ்டை பண்ணி விட்டோம். எங்களால் கூடுமான வரையில் அவ்வளவு நெருக்கமாக வேதவாக்கியத்தைப் பின்பற்றவே முயற்சிக்கிறோம்.

14. கிறிஸ்துவோ, அல்லது வேதாகமத்தில் எந்த இடத்திலுமோ, அவர்கள் எப்பொழுதாவது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த இடத்தை நாம் ஒருபோதும் காண்பதில்லை. அவர்கள் வெறுமனே குழந்தைகளை கர்த்தரிடம் கொண்டு வந்தார்கள், நம்மால் கண்டுபிடிக்க முடிகிற ஒரே வேதவாக்கியம் அதுதான். அவர் தமது கரங்களில் அவர்களைத் தூக்கி அவர்களை ஆசீர்வதித்து, "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்" என்றார். நீங்களோ அவர்களை தெளித்து, அவர்களுக்கு

ஞானஸ்நானம் கொடுக்க விரும்புகிறீர்கள், அது சரி.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★











